செ.வெ.எண்.85 நாள்.03.06.2022

**சென்னை மாவட்டம்**

**செய்தி வெளியீடு**

இந்திய முறை மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவில் காலியாகவுள்ள பதினொன்று பல்நோக்கு பணியாளர், இரண்டு காவலர் மற்றும் இரண்டு விலங்கு காப்பாளர் பணியிடங்களில் முறையே ரூ.8,000 தொகுப்பூதியத்தில் தற்காலிகமாக பணியமர்த்த தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தமிழில் எழுத படிக்க தெரிந்து 18 வயது நிரம்பியவர்கள் உரிய அலுவலரிடமிருந்து தங்கள் வயது தொடர்பாக பெற்ற சான்றிதழுடன் மேற்காணும் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். உயர்கல்வி பயின்றவர்கள் இப்பணியிடங்களுக்கு விண்ணப்பம் செய்வதை தவிர்க்கவும். அதிகபட்ச வயது வரம்பு பொது பிரிவினருக்கு 32 வயது மற்றும் ஏனைய பிரிவினருக்கு 59 வயதும் ஆகும்.

மேற்காணும் தகுதியுடையவர்கள் தங்களது பெயர், பிறந்த தேதி, வயது, விலாசம், ஆதார் எண், கைபேசி எண் ஆகியவற்றை பூர்த்தி செய்து உரிய அலுவலரிடமிருந்து பெற்ற சாதி சான்றிதழ், முன்னுரிமை ஏதேனுமிருப்பின் அதற்கான அலுவலரிடமிருந்து பெற்ற சான்றிதழ்களின் நகல்களுடன் அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் சுய விலாசமிட்ட உறையுடன் கூடிய விண்ணப்பத்தினை “சென்னை – 600106 அரும்பாக்கம், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை இணைப்பு வளாகத்திலுள்ள இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு முதன்மை ஆராய்ச்சி அலுவலர்/இயக்குநர்” அவர்களுக்கு 20.06.2022 அன்று மாலை 5.00 மணிக்கு முன்னதாக கிடைக்குமாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள், எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அவ்வாறு தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் முழுமையாக நிராகரிக்கப்படும். மேலும், விவரங்களுக்கு தொலைப்பேசி எண்.04429570726 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சு.அமிர்த ஜோதி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை மாவட்டம்.